**த. நா.ச.பே. எண் :008** **நாள் :31.03.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று **(31.3.2015)** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தமிழக அரசின் பொதுக் கடன் நிலை குறித்து ஆற்றிய உரை:-

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொதுக் கடன் பற்றி பல்வேறு தவறான தகவல்களும், தவறான கருத்துகளும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அரசு கடனே வாங்கக் கூடாது என்ற ஒரு கருத்தும் சொல்லப்படுகிறது. எனவே, தமிழக அரசு கடன் நிலை பற்றி தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உலக அளவில் அனைத்து நாடுகளும், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் பொதுக் கடன் மூலம் நிதி திரட்டி அவற்றைப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் முதலீட்டுச் செலவினங்களை மேற்கொள்வது வழக்கமான ஒரு நடைமுறைதான். இவ்வாறு அரசு கடன் பெற்று மூலதன முதலீடுகளைச் செய்வது ஒரு சிறப்பான பொருளாதாரக் கொள்கையாகவே பொருளாதார வல்லுநர்கள் கருதுகின்றனர். இது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வரும் வழிமுறையாகும். எந்த அரசும் தமது வருவாய் வரவுகளை மட்டுமே கொண்டு வருவாய் செலவினங்களை ஈடு செய்து அதில் குறிப்பிடத்தக்க உபரியைப் பெற்று மூலதனச் செலவுகளை மேற்கொண்டு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க முடியாது. பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டும் என்றால் அரசு பொதுக் கடன் மூலம் நிதி திரட்டி கூடுதல் மூலதனப் பணிகளை மேற்கொண்டு பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த வேண்டும். இதனால் வருவாய் வரவும் கூடும்பொழுது அந்த கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் அரசுக்கும் அதிகரிக்கும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இவ்வாறு பெறப்படும் கடன்கள் குறைந்த வட்டியில் பெறப்படும் உலக வங்கி போன்ற அயல்நாட்டு நிதி நிறுவனங்கள், நபார்டு வங்கி, இவை தவிர மாநில அரசின் கடன் பத்திரங்களை இந்திய ரிசர்வ் வங்கி மூலம் வெளிச்சந்தையில் முதலீடுகளைப் பெற்று அந்த நிதியை மட்டுமே பயன்படுத்தி வருகிறது. இவ்வாறு வெளிச்சந்தையில் திரட்டப்படும் நிதியை அதிக அளவில் திரட்டினாலும் தமிழ்நாடு போன்ற நல்ல நிதி நிர்வாகம் செய்துவரும் மாநிலங்களின் கடன் பத்திரங்களுக்கு குறைந்த வட்டியிலேயே மூலதனங்கள் கிடைக்கின்றன. இந்த வட்டி விகிதம் பெரும்பாலும் 8 முதல் 8.5 சதவீதமாகவே உள்ளது. இவை 10 ஆண்டுகளில் திருப்பப்பட வேண்டிய கடன் பத்திரங்கள்

ஆகும். எனவே மாநில அரசு கடன் பெறுகிறபோது அது அநியாயமாக வட்டி செலுத்தி கடன் எதுவும் பெறவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஒரு அரசின் பொதுக்கடன் நிலையைப் பற்றி முழுமையாக ஆய்வுசெய்ய வேண்டும் என்றால் முதலாவதாக அந்த அரசு வைத்துள்ள திரும்பிச் செலுத்தவேண்டிய மொத்த கடன் அளவு எவ்வளவு ? இது மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் அளவு எவ்வளவு உள்ளது ? இரண்டாவதாக அவ்வாறு திரும்பச் செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டியைச் செலுத்தக் கூடிய வலுவான நிதி நிலையில் அந்த அரசு இருக்கிறதா ? குறிப்பாக வருவாய் வரவில் திரும்பிச் செலுத்த வேண்டிய வட்டி சதவீதம் எவ்வளவு ? மூன்றாவதாக இவ்வாறு பெறப்படும் கடன், முறையாக மூலதனப் பணிகளிகளுக்காக செலவிடப்படுகின்றதா ? இந்த மூன்று அளவுகோல்களின் அடிப்படையில் மட்டுமே ஒரு மாநிலத்தின் கடன் அளவு மோசமான நிலையில் உள்ளதா அல்லது அளவிற்குள் உள்ளதா ? அரசு திறமையாக செயல்படக்கூடிய வகையில் அத்தகைய கடனைக் கையாண்டு வருகிறதா என்பது தெளிவாகும்.

முதலாவதாக தமிழக அரசின் கடன் அளவை எடுத்துக் கொண்டால் 2014–2015 ஆம் ஆண்டு இறுதியில் திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் அளவு 1,81,036 கோடி ரூபாய். அதாவது 2014–2015 அந்த ஆண்டு இறுதி மார்ச் வரைக்கும். இது மாநிலத்தின் உற்பத்தி மதிப்பில் 19.21 சதவீதம் ஆகும். 2015–2016 ஆம் ஆண்டின் இறுதியில் அதாவது அடுத்த ஆண்டு இறுதியில் திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்த கடன் அளவு 2,11,483 கோடி ரூபாயாக இருக்கும். வருகின்ற 2015–2016 நிதியாண்டினுடைய இறுதியில் அடுத்த மார்ச்சில் ரூ.2,11,483 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 19.24 சதவீதம் ஆகும். ஒரு மாநிலத்தின் கடன் அளவு வரம்பிற்குள் இருக்க வேண்டும் என்றால் அது 25 சதவீதம் அளவை தாண்டக் கூடாது. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அளவை நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்குள்ளாகவே இந்த அரசு பராமரித்து வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை இந்தக் கடன் அளவு குறிப்பிட்ட சதவிதத்திற்குள்ளாகவே கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு இதுவே சான்று என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் 2011–2012 ஆம் ஆண்டில் 19.84 சதவீதமாக இருந்த இந்த அளவு 2014–2015 ஆம் ஆண்டு இறுதியில் 19.21 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது கடனளவு குறைக்கப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகளை

எடுத்துவரும்பொழுது கடன் அளவைக் குறைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது ஒரு தவறான வாதமாகும்.

இரண்டாவதாக இத்தகைய கடனை முறையாக தமிழக அரசு செலுத்தி வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டிற்கு திருப்பிச் செலுத்த வேண்டிய வட்டி 14,755 கோடி ரூபாய். இது 2015–2016 ஆம் ஆண்டில் 17,139 கோடியாகும். இந்த அளவு மாநிலத்தின் வருவாய் வரவில் 12.01 சதவீதமே. அதாவது நாம் திருப்பி செலுத்த வேண்டிய வட்டியின் அளவு 12.01 சதவீதம். 2001–2002 ஆம் அண்டில் கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றபோது இந்த அளவு 18.67 சதவீதமாக இருந்ததை, அதாவது நீங்கள் ஆட்சியை விட்டு போகும்போது, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது 18.67 சதவீதமாக இருந்தது. இது செலுத்தக்கூடிய வட்டியினுடைய சதவீதம். இப்போது 12.01 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆக 18.67 சதவீதமாக இருந்ததை படிப்படியாக குறைத்து 2005–2006 ஆம் ஆண்டில் 13.42 சதவீதமாக்கினார்கள். இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆக்கினார்கள். இதுதான் வரலாறு. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அளவை இந்த அரசு கட்டுக்குள் வைத்துள்ளது. மாநிலத்தின் வருவாய் வரவு உயரும்போது அதற்கு ஏற்றவாறு கூடுதலாக செலுத்த வேண்டிய வட்டியும், செலுத்தவேண்டிய திறனும் அந்த மாநில அரசுகளுக்கு ஏற்படும். இதன் அடிப்படையில் தான் தமிழக அரசு கடன் வரம்பிற்குள் உள்ளது என்றும் கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாத நிலை ஏற்படவில்லை என்றும், திவாலாகும் நிலை ஒன்றும் இந்த அரசுக்கு ஒருபோதும் ஏற்படாது என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மூன்றாவதாக, பெறப்பட்ட கடன் எதற்காக செலவு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கடந்த நான்கு ஆண்டுகளில் பெறப்பட்ட கடன் அளவு 79,687 கோடி ரூபாய். இதே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு 79,528 கோடி ரூபாயாகும். வாங்கப்பட்ட கடனும் 79,000 கோடி ரூபாய், செலவழிக்கப்பட்ட மூலதனச் செலவும் 79,000 கோடி ரூபாய். இதிலிருந்து ஊதாரித் தனமாக செலவழிக்க வில்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். எனவே, பெறப்பட்ட கடன் மூலதனப் பணிகளுக்காக மட்டுமே செலவிடப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மேற்கண்ட விளக்கங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, தமிழக அரசு பெற்றுள்ள கடனும் அது திருப்பிச் செலுத்துகின்ற வட்டிச் சுமையும் கட்டுக்குள் உள்ளது என்பதையும் பெறப்பட்ட கடன் பொருளாதார

வளர்ச்சியை ஊக்குவிக்கும் விதமாகவே, மூலதனச் செலவினங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றது என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஏதோ தமிழகம் மட்டும் தான் கடன் பெற்றுள்ளது என்பது போன்ற கற்பனையான கருத்துக்களைப் பலர் பரப்பி வருகின்றனர். வளர்ச்சி பெற்ற மேற்கத்திய நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் போன்ற நாடுகளும் அதிக அளவில் கடன் பெற்றுத் தான் மூலதனப் பணிகளை மேற்கொள்கின்றன. அத்தகைய பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ள ஜப்பான் நாடு தான் உலகத்திலேயே அதிகக் கடன் பெற்றுள்ள நாடு என்பது குறிப்பிடத்தக்கது. ஏதோ கடன் பெறுவதே குற்றம் என்பது போன்ற எண்ணங்கள் தவறானவையாகும். இந்தியாவை எடுத்துக் கொண்டால் அதற்கு 2014–2015 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டப்படி உள்ள கடன் 62,72,387 கோடி ரூபாய். இந்தக் கடன் அளவு நாட்டின் உற்பத்தி மதிப்பில் 48 சதவீதமாக உள்ளது. நாம் எத்தனை சதவீதத்தில் இருக்கிறோம். 19 சதவீதத்திலே இருக்கிறோம். இது 2015–2016ல் 68,94,691 கோடி ரூபாய் என கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள மாநிலங்களை எடுத்துக் கொண்டால் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆய்வு அறிக்கையின்படி குறைந்த அளவு கடன் பெற்றுள்ள நான்கு மாநிலங்களில் தமிழகம் ஒன்றாக உள்ளது. 2015–2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைப்படி இந்தக் கடன் அளவு தமிழ்நாட்டில் 19.23 சதவீதமாக உள்ள நிலையில், ஆந்திர மாநிலத்தில் 25.05 சதவீதமாகவும், கர்நாடக மாநிலத்தில் 23.61 சதவீதமாகவும், கேரளாவில் 26.95 சதவீதமாகவும், மேற்கு வங்க மாநிலத்தில் 32.61 சதவீதமாகவும் உள்ளது.

ஆகவே தமிழக அரசின் மொத்த கடனுக்கும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பிற்குமான விகிதம் மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அதை மேலும் குறைப்பதற்கான முயற்சிகளையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லரசு தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சின்ன உதாரணத்தையும் நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபோது மாநிலத்தினுடைய சொந்த வரி வருவாய், வணிக வரி, ஆயத்தீர்வை, முத்திரைத் தீர்வை, மோட்டார் வாகன வரி, இதர வரிகள் மூலமாக பெறப்படுகிறது. 2011–2012ஆம் ஆண்டுக் கணக்குப்படி 59,517.30 கோடி ரூபாய் நம்முடைய மாநிலத்தின் சொந்த வரி வருவாயாகக் கணக்கிடப்பட்டது. இந்த வருவாய் 2012–2013ஆம் ஆண்டு 71,254.28 கோடி ரூபாயாக உயர்ந்து, மீண்டும் 2013–2014

கணக்குப்படி, **73,718.10** கோடி ரூபாயாக உயர்ந்து **2014–2015** திருத்த மதிப்பீட்டின்படி **85,769.27** கோடி ரூபாய் ஆக இருக்கும் என்றும் வருகின்ற **2015–2016** வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி இந்த வருவாய் வரவு **96,083.41** கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**2015**–க்கும் **2016**–க்கும் இடைப்பட்ட காலத்தில் உள்ளதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது இருந்த அளவை நாம் இங்கே கழிக்கும் போது **36,565.84** கோடி ரூபாய் வருவாய் வரவில் நமக்கு வளர்ச்சி சதவிகிதம் கூடியிருக்கிறது. இதற்கு காரணம் என்ன**?** இப்போது நாம் நீண்ட விளக்கத்தை இங்கே அளித்தேனே இந்தக் கடன் மூலதனச் செலவுகளுக்காக மட்டுமே செலவழிக்கப்படுகிறது. மூலதனப் பணிகளுக்காகச் செலவழிக்கப்படுகின்ற அந்த நிதி பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. அப்போது நமது மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி அதிகமாக, படிப்படியாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் வரலாற்றுச் சாதனை என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**